**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 31/2024**

**நாள்: 29.04.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 7 (Additional witness)

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் BSA சட்டத்தின் படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமராஜ் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A2, A4, A7, A9, A11, A12, A13, A15 ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது இராமேஸ்வரம் ஜெட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கு பட்டியல் சாட்சிகளான சார்பு ஆய்வாளர் ஜார்ஜ், காவல் ஆய்வாளர் அமுத செல்வி ஆகிய இருவரும் இறந்துவிட்டனர். இந்த வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் நான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 30.10.2015ம் தேதி 18.15 மணியளவில் சார்பு ஆய்வாளர் ஜார்ஜ் நிலைய அலுவலில் இருந்த போது, அரசு பேருந்து நடத்துனர் கண்ணன் என்பவர் அளித்த புகாரின் பேரில், ஜெட்டி காவல் நிலைய மனு ரசீது எண். 74/2015 பிரகாரம் மனு ரசீது பதிவு செய்துள்ளார். பின்னர் 01.11.2015ம் தேதி 21.00 மணிக்கு மேற்படி மனு ரசீதினை நிலைய குற்ற எண்.75/2015, பிரிவுகள்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.29 17:45:37 +0530

147 IPC and Sec.2, 3 of TNPPDL Act r/w 188 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கினை கோவில் வட்ட காவல் ஆய்வாளர் அமுத செல்வி அவர்கள் 22.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, இராமேஸ்வரம் அரசு போக்குவரத்து பணிமனைக்கு சென்று, அரசு பேருந்தின் நடத்துநர் கண்ணன் மற்றும் ஓட்டுநர் காளிதாஸ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினம் 24.00 மணிக்கு சேதம் அடைந்த அரசு பேருந்தின் கண்ணாடி துண்டுகளை படிவம் 91 மூலம் கைப்பற்றியுள்ளார். அந்த **படிவம் 91 ஆனது அ.த.சா.ஆ.5** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. அந்த **கண்ணாடித்துண்டுகள் சா.பொ.1 முதல் 3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளன.

பின்னர் 02.11.2015 ம் தேதி மேற்படி பேருந்தில் பாதுகாப்பிற்கு சென்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் கண்ணன் மற்றும் தலைமைக்காவலர் ஏழுமலை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினம் இவ்வழக்கின் எதிரிகளான பிரவீன், முனீஸ்வரன், முனீஸ்வரன் என்ற முனீஸ்குமார், பூமுருகன் ஆகியோர்களை கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

பின்னர் 03.11.2015 ம் தேதி சேதப்படுத்தப்பட்ட அரசு பேருந்தை ஆய்வு செய்து, சேத மதிப்பு சான்று வழங்கிய இராமேஸ்வரம் அரசு போக்குவரத்து பணிமனை Foreman கருப்புசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சேத மதிப்பு சான்று பெற்றுள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற எதிரிகள் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் எதிரிகளை கைது செய்யவில்லை.

பின்னர் அரசு பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் ஆகியோர்களை பணி



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.29 17:45:40 +0530

நியமனம் செய்த இராமேஸ்வரம் அரசு போக்குவரத்து பணிமனை இளநிலை உதவியாளர் இளையரசு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பணி நியமனம் தொடர்பாக சான்று பெற்றுள்ளார். இவ்வழக்கில் மற்றொரு எதிரியான சேது என்பவரை 23.11.2015ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை 10.02.2016ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவினை 143, 188 IPC and 3(1) of TNPPDL Act ஆக மாற்றம் செய்து மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.6** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வழக்கில் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 143, 188 IPC and 3(1) of TNPPDL Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரில் சம்பவம் எந்த இடத்தில், எத்தனை மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லப்பட்டுள்ளது. புகாரானது சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளை அடையாளம் காண்பிக்க அடையாள அணிவகுப்பு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

சேதப்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் பேருந்தின் புகைப்படம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பேருந்தில் பயணம் செய்த 55 நபர்கள் யார் யார் என்று குறிப்பிட்டு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.29 17:45:47 +0530

புலன்விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரானது பின்னிட்டு புள்ளி விவரத்திற்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக விசாரிக்காமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.04.29 17:45:49 +0530

மறு விசாரணை – இல்லை.

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .